# SENGUNTHAR

# Daily News

29-01-2025/SEC/DN/108



## Seminar on Four Quadrant Operation in Electrical Drives Held by EEE Department

The Department of Electrical and Electronics Engineering organized a seminar on "Four Quadrant Operation in Electrical Drives" on January 29, 2024. The session was presented by Selvan R. Karthick, a promising student, under the expert guidance of Dr. K. Umadevi, Dean of Planning & Development and Professor & Head of the EEE Department.

# SENGUNTHAR
# Daily News

**29-01-2025/SEC/DN/108**

## TAMIL NEWSPAPER, SALEM EDITION




### செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் குடியரசு தினவிழா




திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் தலைவர் ஜான்சன்ஸ் நடராஜன் தலைமையில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. பொருளாளர் தனசேகரன் தேசியக்கொடி ஏற்றி வைத்தார். தாளாளர் பாலதண்டபாணி, வேலை வாய்ப்புத்துறை இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு, பொறியியல் கல்லூரி முதல்வர் சதீஷ்குமார், மருந்தியல் கல்லூரி முதல்வர் சுரேந்திரகுமார், அலைடு ஹெல்த் சயின்ஸ் முதல்வர் வசந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# SENGUNTHAR
# Daily News

29-01-2025/SEC/DN/108

## நுவலி தமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள் 470

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

விளக்கம்

தம்முடைய நிலைமைக்கு மாறான செயல்களை உயர்ந்தோர் பாராட்டமாட்டார்கள் என்பதால், அவர்கள் பழித்துரைக்காத செயல்களையே செய்திடல் வேண்டும்.

## இலக்கணக் குறிப்பறிதல்

மலர்விழி -- உவமைத் தொகை:

விளக்கம்:

மலர்விழி என்ற சொல் உவமைத் தொகைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இதில் மலர்விழி என்பதன் முழுத்தொடர் மலரைப் போன்ற விழி என்பதே மலர்விழி என சுருங்கிற்று.

அதாவது மலரைப் போன்ற விழியை உடையவள் என்று குறிப்பிடலாம்.

இதில் "போன்ற" என்ற உவம உருபு மறைந்து வருவதால் இது உவமைத்தொகையாகிற்று.

மலர்விழி என்ற சொல்லில் மலர் என்பது உவமை. விழி என்பது உவமேயம்.

உவமைக்கும் உவமேயத்திற்கு இடையே போன்ற "போல", "போன்ற", "அன்ன" என்ற உவம உருபுகள் மறைந்து வருவது உவமைத்தொகையாகும்.

## பிற மொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிற மொழி - ஆமோதி          தமிழ் மொழி- வழிமொழி